# பரணரின் தலைவி கூற்றுப் பாடல்களில் அனிமா வெளிப்பாடுகள்

**அ. கார்த்திகேயன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் புலம்**
**தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்**
**திருவாரூர் – 610 005**
karthikeyanannathurai147@gmail.com

51

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க அக இலக்கியத்தில் பரணர் இயற்றிய தலைவி கூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பரத்தையர் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, தலைவன் தலைவி சந்திப்பு, வரைவு நீட்டிப்பு போன்ற சூழல்களில் தலைவி கதாப்பாத்திரம் வெளிப்படுத்தும் உணர்வெழுச்சிகளின் போக்குகளை காரல் யூங் குறிப்பிடும் அனிமா எனும் கருத்தியலின் அடிப்படையில் அணுகி, தலைவி கூற்றில் காணப்படும் பெண் சார்ந்த உணர்வெழுச்சிகள் பரணர் என்கிற ஆண் புலவரின் கூட்டு நனவிலி மனத்தில் உள்ள அனிமா என்னும் மூலப்படிவத்தின் வெளிப்பாடே எனச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** அனிமா, அனிமஸ், பரணர், மூலப்படிவம், உணர்வெழுச்சி, நனவிலி

**முன்னுரை**

ஒரு படைப்பை எவ்விதம் அணுகினால் புதிய அர்த்தத்தைப் பெற முடியும் என்பதற்கான வழிமுறைகளைக் காட்டுவது கோட்பாடாகும். அறிவியல்முறைத் திறனாய்வில் பல கோட்பாடுகள் இலக்கிய ஆராய்ச்சிக்கு வளம் சேர்ப்பதன் மூலம் இலக்கியம் என்பது அறிவியல் களமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இவ்வரிசையில் மனிதனின் நடத்தைகளைக் காரணிகளோடு ஆராய முற்படுவது உளவியல். இவ்வாராய்ச்சி, பல்வேறு அணுகுமுறைகளைக் கொண்டது. அதைப்போன்று மனிதனுடைய மனத்தின் வெளிப்பாடே இலக்கியமாகும். அகத்திணை மாந்தர்களின் உணர்ச்சிகளை உரையாடல்களின் வழிச் சங்க காலப் புலவர்கள் இலக்கியத்தில் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் பரணர் இயற்றிய சங்க அக இலக்கியத் தலைவி கூற்றுப் பாடல்களில் உளப்பகுப்பாய்வாளர் காரல் குஸ்தவ் யூங்கின் அனிமா என்கிற மூலப்படிவம் வெளிப்பட்டுள்ளதைக் கண்டறிந்து அவற்றுக்கு இடையிலான ஊடாடல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**காரல் குஸ்தவ் யூங்கின் உளப்பகுப்பாய்வு**

ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவரிடமிருந்து பிரிந்து பகுப்பாய்வு உளவியலை நிறுவுகிறார் யூங். நனவிலி மனதிற்குள் தனியாள் நனவிலி, கூட்டுநனவிலி ஆகிய இரண்டு பகுப்புகள் உள்ளதைக் கண்டுப்பிடித்தவர் இவரே. மேலும் இவர் கண்டறிந்த ஈகோ, சுயம், தனியராக்கப் படிமுறை, அகமுகத்தவர், புறமுகத்தவர் போன்ற கருத்தாக்கங்களும் குறிப்பிடத்தக்கன.

“தனியாள் நனவிலி உருவாக்கத்திற்கு அமுக்கம் காரணமாக இருப்பதை விவரித்த ஃப்ராய்டியத்தை ஏற்கும் யூங், கூட்டு நனவிலிக்குக் காலங்காலமாகப் புழக்கத்தில் இருக்கின்ற வழக்காறுகள் தோற்றுவித்த உருக்கள் / படிமங்கள் காரணமாகின்றன என்கிறார். இதன்படி

இனநினைவுருக்களின் தொகுப்பே கூட்டுநனவிலி என்பது அவரின் முடிவு". (தி.கு.இரவிச்சந்திரன், ஃப்ராய்ட், யூங், லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், ப.96)

கூட்டுநனவிலி மனத்தில் மூலப்படிவமே முக்கியப் பங்காற்றுகிறது. "கூட்டு நனவிலியில் உள்ள மூலப்படிவங்களே உளவாழ்வையும் சமூக வாழ்வையும் தீர்மானிக்கின்றன என்கிறது யூங்கியம். நனவிலிச் சிக்கல்கள் உள்ளுணர்ச்சிகளாக இயக்கம் பெறுகின்றன என்கிறது ஃப்ராய்டியம். கூட்டுநனவிலி மூலப்படிவங்கள் உள்ளுணர்ச்சிகளாக விளங்குகின்றன என்கிறது யூங்கியம். (தி.கு.இரவிச்சந்திரன்,காப்பிய உளப்பகுப்பாய்வு,ப,40)

கூட்டுநனவிலி மனத்தில் பல்வேறு மூலப்படிவங்களைக் கண்டுப்பிடித்துள்ளார் யூங். இருப்பினும் பொது மூலப்படிவங்களாக அருட்தாய், அச்சுறுத்தாய், அனிமா, அனிமஸ், நாயகன், தந்தை, சாயல், புறத்தாள் போன்ற கருத்தாக்கங்களை முன்வைக்கிறார்.

**அனிமா**

மனிதனுடைய சமூக வாழ்வில் ஆண், பெண் என்கிற பாலினப் பாகுபாடுகள் அடிப்படையாகக் கருதப்படுகிறது. அனிமா என்பது பெண்ணுரு, அனிமஸ் என்பது ஆணுருவாகும். அதாவது "ஆணிடம் உள்ள கற்பனைப் பெண்ணுரு அனிமா எனப்படுகிறது. பெண்ணிடம் உள்ள கற்பனை ஆணுரு அனிமஸ் எனப்படுகிறது". (தி.கு.இரவிச்சந்திரன், தொல்காப்பியமும் யூங்கியமும் சில இணைநிலைகள்.ப.19)

சங்க அகஇலக்கியத்தில் தலைவி கூற்று என்பது காதல் மற்றும் தனிப்பட்ட நிலைமைகளை வெளிப்படுத்தும் பெண்கதாபாத்திரத்தின் குரல் ஆகும். ஆண் புலவர்களில் ஒருவரான பரணர், பெண்களின் மனம் மற்றும் சிந்தனைகளை ஆழமாகக் கற்பனை செய்து தலைவி கூற்றுப் பாடல்களில் பெண்ணின் மனஅனுபவங்களை மிக நுட்பமாக ஆராய்ந்து பல்வேறு உணர்வெழுச்சிகளைப் பதிவு செய்துள்ள போக்கினையும் காணமுடிகிறது. இப்படைப்புச் செயல்பாட்டை யூங்கின் கோட்பாட்டின்படி பரணர் என்கிற ஆண் புலவரின் அனிமா வெளிப்பாடு எனக் கருதலாம். தலைவனின் பரத்தையிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு போன்ற பிரிவு காரணமாகத் தலைவியின் மனத்துடிப்பினால் ஏற்படும், பல்வேறு ஆழத்து உணர்வெழுச்சிகளைப் பரணரின் பாடல்களில் காணமுடிகிறது.

**பரத்தையிற் பிரிவுச் சூழலும் அனிமாவும்**

பரத்தையின் மீதான காதல் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் பரத்தையிற் பிரிவு ஆகும். யூங்கின் உளவியல் கோட்பாட்டில், ஆண்களின் அனிமா அவர்களது உள்ளார்ந்த பெண்ணுருக்களை வெளிப்படுத்தும் என்று சொல்லப்படுகிறது. இதன் அடிப்படையில் பரத்தைப் பிரிவுக் காலத்தில் தலைவி கூற்றுப் பாடல் வடிவில் பெண் கதாபாத்திரம், குறிப்பாகத் தலைவி வெளிப்படுத்தும் உணர்வெழுச்சிகளை ஆண் புலவரின் பாடல்களில் காணலாம். சான்றாக,

"……………………………………
**நெருநல் ஆடினை புனலே இன்றுவந்**
**மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்**
**முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல**
……………………………………

**இனிமையெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே."** **(அகம்.06)** இப்பாடலில் தலைவியின் மனம் கடுந்துன்பம் அடைந்து வருந்துவதையும் மற்றும் பரத்தை தீண்டிய உன் மார்பினை நான் தீண்டமாட்டேன் என் அருகில் வராதே என்று கோபத்தை வெளிப்படுத்துகின்ற மனநிலையையும் காணமுடிகிறது. மேலும் ஊடல் நீங்கி தலைவன் மீது இரக்க உணர்வை வெளிப்படுத்துவதாக, **"கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை" (அகம்.236**) என்ற பாடலும் பெண்ணின் மனத்துடிப்பை வெளிப்படுத்துவதாக, "**செருமிகு சேஎயொடு உற்ற சூளே" (அகம்.266)** என்ற பாடலும் அமைகின்றன. பரத்தையிடமிருந்து மீண்டு வந்த தலைவன் மீது ஏற்பட்ட கோபத்தால் அவனைப் பகைவன் என்று கூறுகின்ற அளவிற்கு அவளுடைய மனமானது துன்பம் அடைவதை, "**முகையவிழ் கோதை வாட்டிய, பகைவன் மன்யான் மறந்தமை கலனே" (நற்.260)** எனும் பாடல் வெளிப்படுத்துகிறது. மேலும், பரத்தையிடம் பிரிந்த தலைவனிடம் உன்னைத் தழுவதலையே என் கைகள் துடிக்கின்றன என்று தலைவி குறிப்பிடுவதால் தலைவன் மீது உள்ள வேட்கையை வெளிப்படுத்தும் கூற்றாக, **"விடேஎன் விடுக்குவென் ஆயின் கடைஇக், கவவுக்கை தாங்கும் மதுகையம் குவவுமுலை" (நற்.350)** என்ற பாடல் அமைகின்றது. இவ்வாறு தலைவி கூற்றுப் பாடல்களில் ஒரு பெண்ணின் கணவன் தன்னை விட்டு இன்னொரு பெண்ணை நாடிய போது அதாவது பரத்தையிற் பிரிவினால் ஏற்படுகின்ற மனஅழுத்தம், கோபம், எதிர்ப்பு, பொறாமை, இரக்கம், போன்ற உணர்வெழுச்சிகள் பரணருடைய மனத்தின் பெண் உணர்வு சார்ந்த அனிமா வெளிப்பாடே ஆகும் என்று யூங்கின் கருதுதலிலிருந்து கூறமுடியும்.

**பொருள்வயிற் பிரிவுச் சூழலும் அனிமாவும்**

பொருள் காரணமாகப் தலைவியை விட்டுப் பிரியும் பிரிவு பொருள்வயிற் பிரிவு ஆகும். இச்சூழலில் காதலனின் நலத்தை மட்டுமே நினைத்து அத்துயரத்தால் தலைவியின் மனம் தவித்தல், அவனை நினைத்தே ஏங்குதல், அவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருத்தல்தான் தலைவிக்குச் சுகத்தை அளிக்கும் என்பன போன்ற உணர்வெழுச்சிகள் தலைவி கூற்றுப் பாடல்களில் வெளிப்படுவது ஆண் புலவரின் வேட்கையே அதாவது அப்புலவனின் அனிமா படைப்பே ஆகும்.

சான்றாக, பிரிந்த தலைவன் மீது காதல் வேட்கை பெருகியதால் மாலைக் காலத்தில் தனக்குள் தோன்றிய ஏக்கவுணர்வை வெளிப்படுத்துவதாக, "**புல்லென் மாலையும் இனிதுமன் றம்ம….., செயிர்தீர் இன்றுணைப் புணர்ந்திசி னோர்க்கே" (அகம்.367)** என்ற பாடல் அமைந்துள்ளது. மேலும் பிரிந்த தலைவன் திரும்பி வருவேன் என்று சொல்லிய இளவேனிற் பருவத்தைக் கண்ட தலைவிக்கு ஏற்படும் துன்ப பெருக்கத்தைக் காட்டுவதாக, **"தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக், குழைய கொடியோர் நாவே" (குறுந்.24)** என்ற பாடல் அமைகிறது. மேலும் இன்னொரு கூற்றில் தலைவன் முன்னர் நான் பிரியமாட்டேன் என்று சொல்லி வரைபொருள் பொருட்டுப் பிரிந்த காலத்தில் இப்பிரிவுத் துன்பத்தை நானே பொறுத்துக்கொள்கிறேன் நீ ஏன் வருந்துகிறாய் என்று தோழியிடம் கேட்பதாக, **"தாவா வஞ்சின முரைத்தது, நோயோ தோழி நின் வயினானே" (குறுந்.36)** எனும் பாடல் தலைவி துன்பத்தைத் தாங்கிகொள்கின்ற மனோபாவத்தை காட்டுவதாக அமைகிறது. மேலும் இவைபோன்ற பிரிவுச் சூழலில் மட்டுமின்றி **"பாசி யற்றே பசலை காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்த லானே" (குறுந்.399),** என்று வரைவு நீட்டித்த காலத்திலும், **"எல்லாம் மடிந்த காலை யொருநாள், நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, அதனால்…" (அகம்.122)** என்று தலைவன்

தலைவி சந்திக்கும் சூழலிலும் ஏற்படுகின்ற மனத்தவிப்பு, மனக்குழப்பம், வெறுமை, தனிமைத் துயரம், எதிர்பார்ப்பு, மனச்சோர்வு போன்ற உணர்வெழுச்சிகள் வெளிப்படுவது மிகத் தீவிரமாக விவரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"அனிமா என்கிற பெண்ணுரு ஆடவரிடம் தர்க்கமற்ற மனோபாவங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும். எதிர்வினை புரியவைக்கும். மற்றும் துடிப்புகளையும் உருவாக்கும். சில பண்பாட்டுக்கு ஏற்ப அமைவதுண்டு" (தி.கு.இரவிச்சந்திரன், தொல்காப்பியமும் யூங்கியமும் சில இணைநிலைகள்.ப.21) என்கிற அனிமா பண்புகள் இங்கு நோக்கதக்கது ஆகும்.

எனவே ஓர் ஆண் படைப்பாளன் தனது கூட்டுநனவிலியில் படிந்துள்ள பெண் சார்ந்த கருத்துருக்களின் அடிப்படையில் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் பல்வேறு சூழல்களில் ஏற்படுகின்ற மன உணர்வெழுச்சிகளைத் தனது படைப்பில் பதிவு செய்கிறான். அவ்வாறான மன உணர்வெழுச்சிகள் ஆண் படைப்பாளனின் அனிமா வெளிப்பாடுகளே என்று யூங் கோட்பாட்டின்படி கருதலாம்.

மேலும் தொன்மம், வரலாறு, குறியீடு, படிமம் ஆகியவற்றோடு இணைந்து மூலப்படிவங்கள் வெளிப்படும் என்ற கருத்தின்படி தித்தன், மத்தி, விரான், தழும்பன், ஆதிமந்தி போன்றவர்களின் வரலாறுகள், காமூர், நீடூர் போன்ற ஊர்களின் வரலாறுகள், களிறும் பிடியும் புனலாடும் காட்சி போன்று வேறுபல இயற்கைக் காட்சிப் படிமங்கள் போன்றவற்றை உணர்வெழுச்சிகளுடன் இணைத்தே வெளிப்படுத்தும் போக்கினையும் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது.

"அனிமா/அனிமஸ் அமைப்பு கூட்டு நனவிலியிலிருந்து நனவு ஈகோ வரை வியாபித்து இருக்கிறது. இரண்டு உருக்களும் அனைவரின் ஆன்ம அடிப்படையாகும். அதாவது அனைவரிடம் இருக்கின்ற கருத்துருக்கள் ஆகும். இவற்றிற்கான உளவெளி கூட்டு நனவிலியில் இருக்கிறது. இந்த வெளி ஆதிகாலத்துப் புறநிலை உறவுகளால் உணர்வுப் பூர்வமாக உருவானது. மேலும் இவ்விரண்டும் அனைவரிடத்திலும் இருந்தாலும் ஆணிடம் அனிமஸ் (ஆண்மை) வெளிப்படையாகவும் அனிமா (பெண்மை) மறைந்தும் காணப்படும். இதேபோல் பெண்ணிடம் அனிமா (பெண்மை) வெளிப்படையாகவும் அனிமஸ் (ஆண்மை) மறைந்தும் காணப்படும். உடல் தன்மைக்கு ஏற்ப அனிமாவோ அனிமஸோ குடிக்கொள்ளும் என்பது உளவிதி. இதன்படி ஆணிடம் அனிமஸ் நனவு என்றால் அனிமா நனவிலி ஆகிறது. பெண்ணிடம் அனிமா நனவு என்றால் அனிமஸ் நனவிலி என்றாகிறது". (தி.கு.இரவிச்சந்திரன், அம்மாள் வந்தாள் உளப்பகுப்பாய்வு, ப.189)

அனிமா மூலப்படிவம் பரணர் என்கிற ஆண்புலவரின் கூட்டுநனவிலி மனத்தில் உள்ள சாயலின் அமுக்கப்பட்ட கருத்துருக்களே ஆகும். மேலும் பரணரின் சுயம் என்பது அனிமா உணர்வுகளை வெளியேற்ற வேண்டும் என்பதே. இக்கோரலை நனவு மனத்தில் உள்ள ஈகோவானது இலக்கியப் படைப்பின்வழி நிறைவு செய்த மனச்செயல்பாட்டைப் பரணரின் பாடல்களில் காணமுடிகிறது.

**முடிவுரை**

மனித மனத்தைக் கட்டமைப்பதில் இலக்கியத்துக்குப் பெரும்பங்கு உள்ளது. சமூக வாழ்க்கையில் பெண்சார்ந்த உணர்வுகளைக் கட்டமைக்கின்ற பொறுப்பில் இந்த அனிமா மூலப்படிவம் முக்கியப் பங்காற்றுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் இலக்கியத்தில் காட்டும் உணர்வுகள் அனைவராலும் உணரக்கூடியவையே ஆகும். எனவே தலைவி கூற்றுப் பாடல்களில் அனிமா ஊடாடல்களின் அடிப்படையில் சங்க இலக்கியப் பெண் கதாப்பாத்திரமானது

வருத்தப்படுவது, தன்னைத்தானே வருத்திக்கொள்வது, பிரிந்த தலைவனுக்காக ஏங்குவது போன்ற உணர்வெழுச்சிகள் சார்ந்த படைப்புகள் ஆணின் கூட்டுநனவிலியில் காலங்காலமாகச் சேமிக்கப்பட்ட மூலப்படிவங்களில் ஒன்றான பெண்ணுருக்களே ஆகும். எனவே ஆண் புலவர் படைப்பில் தன்னுடைய கூட்டுநனவிலி மனத்தின் படிமக் கருத்துருக்களை ஒரு பெண் தன் உணர்வெழுச்சியை வெளிப்பதுத்துவது போன்று ஆளுருவாக்கம் செய்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது. இதன் அடிப்படையில் இவ்வாய்வின் மூலம் பரணர் என்கிற ஆண்புலவரின் தனியாள்நனவிலி கூட்டுநனவிலி ஆகிய மனச்செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும் அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


இரவிச்சந்திரன் தி.கு, ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், அடையாளம் பதிப்பகம்,புத்தாநத்தம்: 2007.

இரவிச்சந்திரன் தி.கு, அம்மா வந்தாள் உளப்பகுப்பாய்வு ஃப்ராய்ட் யூங் லக்கான் நோக்கில் புதிய புரிதல், அலைகள் வெளியீட்டகம், சென்னை: 2022.

இரவிச்சந்திரன் தி.கு, காப்பிய உளப்பகுப்பாய்வு, பிறழ் வெளியீடு, மதுரை, நவம்பர்: 2019.

சண்முகசுந்தரம்.சு (தொகுப்பாசிரியர்)., ந. சஞ்சீவியின் சங்க இலக்கிய ஆராய்ச்சியும் அட்டவணையும், காவ்யா பதிப்பகம், சென்னை: 2010.

சாமிநாதையர். உ.வே (உரையாசிரியர்)., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா நூல்நிலையம், சென்னை:,2020.

நாரயணசாமி ஐயர் .அ (உரையாசிரியர்)., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 2017.

பெரியகருப்பன் . இராம, (தமிழண்ணல்), சங்கமரபு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை: 2012.

வேங்கடசாமி நாட்டார். ந.மு. நாவலர், வேங்கடாசலாம் பிள்ளை.ரா கரந்தை கவியரசு (உரையாசிரியர்)., அகநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 2007.


**ஆய்வுக் கட்டுரை**


இரவிச்சந்திரன். தி.கு., தொல்காப்பியமும் யூங்கியமும்: சில இணைநிலைகள், https://manalveedu.org/%E0%AE%A4%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AF%E0%AF%82%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF/